10th April 1958]

Fisheries

* 652 *Q.*—SRI A. R. MARIMUTHU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any amount has been received recently from the Central Government for fisheries;

(*b*) if so, how much; and

(*c*) how it is proposed to be spent?

THE HON. SRIMATHI LOURDAMMAL SIMON : (*a*) & (*b*) A total amount of Rs. 2,76,391 as subsidy and Rs. 1,50,375 as loan have been sanctioned by the Government of India for the current year (1957–58) for the schemes of the Fisheries Department included in the Second Five-Year Plan.

(*c*) A statement [a] is placed on the table.

Block Development Officers

* 653 *Q.*—SRIMATHI A. S. PONNAMMAL : Will the Hon. the Chief Minister be pleased to state the total number of Block Development Officers and number of Harijan Officers among them?

THE HON. SRI C. SUBRAMANIAM : One hundred and forty-one Block Development Officers are now working. Two of them are Harijans.

SRIMATHI A. S. PONNAMMAL : 135 பிளாக்குகள் இருந்தும் அவைகளில் மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள ஹரிஜன அபிவிருத்தி இலாகா அதிகாரிகள் இருப்பதால் 10 சதவிகிதம் என்று உயர்த்தி அந்த அளவுக்காவது ஹரிஜனங்களுக்கு வேலை கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நேரடியாக இந்த உத்தியோகங்களுக்கு நியமிப்பது இல்லை. வேறு இலாகாக்களிலிருந்து மாற்றப் படுகிறார்கள். ஆகையால், அங்கிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்குள்ளேயிருந்துதான் மாற்றப்படவேண்டும். இதிலே சமுதாய அடிப்படையிலே பிரதிநிதித்துவம் வேண்டும் என்று சொல்வது தவறு என்பது என்னுடைய கருத்து.

SRI P. G. MANICKAM : லாயக்குள்ள ஹரிஜனங்களை டைரெக்ட் ரெக்ரூட்மெண்ட் மூலம் சேர்ப்பதற்கு சர்க்கார் யோசனை செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசரைப் பொருத்தது. இப்பொழுது உத்தியோகத்தில் வேறு இலாகாக்களில் இருப்பவர்களை மாற்றுவதன் மூலமாக ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

SRI M. JAGANNATHAN : ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசர் பதவிக்கு நியமனம் செய்வதில் சமுதாய அடிப்படையில் கோருவது தவறு என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எப்படித் தவறாகும் என்பதை அவர்கள் விளக்குவாரா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நியமனம் செய்வது என்று சொல்லவில்லை. விகிதாசாரப் பிரகாரம் நியமிக்கவேண்டுமென்று சொல்வது தவறு என்று சொன்னேன். இந்த வேலைக்கு யார் தகுதியாய் இருக்கிறார்களோ அவரைப் பார்த்து நியமிக்கவேண்டும். இது புதிதாக ஏற்படுத்தப்பட்ட உத்தியோகம் அல்ல. உத்தியோகத்திலே இருக்கிறவர்களையே நியமிக்கவேண்டும்.

---

[a] Printed as Appendix I on pages 576–577 infra.